21.12.2019

**பத்திரிக்கை செய்தி**

**நாளை மட்டும் (22.12.2019) மெட்ரோ இரயில் சேவை அதிகாலை 04.30 மணி முதல் இயக்கப்படுகிறது**

சென்னை, மீனம்பாக்கம், ஏ.எம்.ஜெயின் கல்லூரியில் நாளை (22.12.2019) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் யோகா நிகழ்ச்சியை ஒட்டி மெட்ரோ இரயில் பயணிகளின் வசதிக்காக வழக்கமான நேரமாகிய காலை 06:00 மணிக்கு பதிலாக நாளை (22.12.2019) மட்டும் அதிகாலை 04:30 மணியில் இருந்து மெட்ரோ இரயில் சேவை தொடங்குகிறது.

பொதுமக்கள் மற்றும் மெட்ரோ இரயில் பயணிகளின் வசதிக்காக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், அனைத்து ஞாயிற்றுக்கிழமைகள் மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் மெட்ரோ இரயில் பயணச் சீட்டுகளில் 50 சதவீத கட்டணத் தள்ளுபடி வழங்கி வருகிறது.